இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை – 2020 யூலை

## (103) பொருளியல்

இவ்வினாத்தாளுக்கு பொரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்திகரமான விடைகளை அளித்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. பாடத்திட்டத்தின் திருத்தத்துடன் மட்டம் I இன் கீழ் பொருளியல் பாடம் அமைக்கப்பட்டுள்ளது. அதிகளவான பரீட்சார்த்திகளால் திருப்திகரமான விடைகள் அளிக்கப்பட்டிருந்த போதிலும், ஒரு சில குறைபாடுகளும் காணப்பட்டன. அத்தகைய விடயங்கள் தொடர்பில் புள்ளியிடும் பரீட்சகர்களால் அவதானிக்கப்பட்டவை கீழே தரப்படுகின்றன :

## பகுதி A

### வினா இல. 01

பாடத்திட்டம் திருத்தப்பட்டிருந்த போதிலும், இந்தப் பகுதியானது முன்னைய பாடத்திட்டத்தில் உள்ளதைப் போலவே மொத்தமாக 40% புள்ளிகளுக்காக பாடத்திட்டத்தின் பெரும் பகுதியை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. இப்பகுதியானது அடிப்படை விஞ்ஞானரீதியான பொருளியல் கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்களின் அடிப்படையில் பாடத்திட்டத்தின் கனத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தது. இந்தப் பகுதியின் கட்டமைப்பு 4 வகையான வினாக்களை உள்ளடக்கி யிருந்தது. இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்கள் தரப்பட்ட விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்யுமாறு கேட்டிருந்தது. வினா இல. **1.11** உம் **1.12** உம், தரப்பட்ட இரண்டு விடைகளிலிருந்து சரியானதைத் தெரிவு செய்யுமாறு கேட்டிருந்தது. இல. **1.13** தொடக்கம் **1.15** வரையான வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்கள் சரியானதா, தவறானதா எனக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களுக்கு குறு விடைகளை எழுதுமாறு கேட்கப்பட்டது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு திருப்திகரமான விடைகளை எழுதியிருந்ததுடன் உயர் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், குறைபாடுகளைக் கொண்டிருந்த விடைகளுடன் தொடர்புடைய பொதுவான கருத்துக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன :

மொத்தத்தில், இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுக்கான விடைகள் திருப்திகரமானதாக இருந்தது, ஆனால் வினா இல. **1.6** மற்றும் **1.7** இற்கு தவறான விடைகள் அளிக்கப்பட்டிருந்தன.

வினா இல. **1.14** இற்கான விடைகள் பெரும்பாலும் தவறாகவே வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், குறு விடைகள் எழுதுமாறு கேட்கப்பட்ட வினாக்களான இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வற்றிற்கு பூரணமற்ற விடைகளோ அல்லது தவறான விடைகளோதான் வழங்கப்பட்டிருந்தன. விசேடமாக அதிகளவான பரீட்சார்த்திகளால் வினா இல. **1.17, 1.19** மற்றும் **1.20** ஆகியவற்றிற்கு சரியான விடைகளை எழுத முடியவில்லை. அத்துடன் சில பரீட்சார்த்திகள் இந்தப் பிரிவில் காணப்பட்ட எந்த வினாவுக்கும் விடை அளித்திருக்கவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

## பகுதி B

### வினா இல. 02

**(a)** பொருளியலின் அடிப்படை எண்ணக்கருவான பொருளாதாரப் பொருட்களை பொருளாதாரமற்ற பொருட்களில் இருந்து வேறுபடுத்துகின்ற பரீட்சார்த்திகளின் அறிவு இவ்வினாவின் மூலம் பரீட்சிக்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சில எல்லை வரை திருப்திகரமான விடைகளை அளித்திருந்தனர். மிகச் சில பரீட்சார்த்திகள் பொருட்கள் மற்றும் சேவைகள் பற்றிய நீண்ட விளக்கத்தை வழங்கியிருந்தனர்.

**(b)** இவ்வினா பொருளாதார முறைமைகள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. இங்கு திட்டமிடப்பட்ட பொருளாதார முறைமை ஒன்றின் பண்பியல்புகளை நிரற்படுத்துமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த இலகுவான வினாவுக்குச் சரியாக விடையளித்திருந்தனர். மிகச் சில பரீட்சார்த்திகள் பொருளாதார முறைமைகளை மாற்றி மாற்றி எழுதியிருந்தனர்.

**(c)** இவ்வினா சந்தர்ப்பச் செலவு எண்ணக்கரு தொடர்பில் பரீட்சார்த்திகள் விளங்கிக் கொண்டுள்ளவை பற்றிப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலானவர்கள் சரியான விடைகளை எழுதியிருந்தனர். தேவையற்ற நீண்ட வகைகள் பற்றி எழுதி நேரத்தை வீணடித்திருந்த சில சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. இது சில பரீட்சார்த்திகளிடம் சந்தர்ப்பச் செலவு எண்ணக்கரு பற்றிய எவ்வித விளக்கமும் காணப்படவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

### வினா இல. 03

**(a)** இவ்வினா வினாவில் தரப்பட்ட விடயங்களின் அடிப்படையில் சந்தைச் சமநிலை பற்றிய அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்த்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சமநிலை விலை மற்றும் கணியத்தைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர். பெரும்பாலானவர்களால் நுகர்வோர் மிகையைச் சரியாகக் கணிப்பிடுவதற்கு முடியாமற் போயிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. தொடர்புடைய எண்ணக்கரு பற்றிய அறிவு குறைவாகக் காணப்பட்ட பரீட்சார்த்திகளால் எண்கணித வழுக்களும் விடப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

**(b)** இது நெகிழ்ச்சி பற்றிய எண்ணக்கரு மீதான அறிவைப் பரீட்சித்த ஒரு இலகுவான வினாவாகும். சில பரீட்சார்த்திகள் விடையாக 'கேள்வி' யைத் தீர்மானிக்கின்ற காரணிகள் பற்றி எழுதியிருந்தனர். 'கேள்வி' மற்றும் 'கேள்வி நெகிழ்ச்சி' ஆகியன ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட இரு வேறு எண்ணக்கருக்கள் என்பதைப் பரீட்சார்த்திகள் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை என்பதையே இது தெளிவாகக் காட்டுகிறது.

**(c)** இங்கு சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கம் தலையீடு செய்கின்ற 2 வழிகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு சரியான விடைகளை வழங்கியிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், விடைகள் கோட்பாட்டு எண்ணக்கருக்கள் பற்றிய விளக்கமின்றி, 'மேற்பரப்பான' விடயங்கள் தொடர்பாகவே அளிக்கப்பட்டிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

### வினா இல. 04

**(a)** இவ்வினா 'பணம்' பற்றிய எண்ணக்கருசார்ந்த அறிவு மற்றும் விளக்கத்தைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் பணத்தின் பண்புகள் பற்றிச் சரியாக விடை அளித்திருந்த போதிலும், சிலர் இலத்திரனியல் பணத்தைப் பயன்படுத்துவதற்கான காரணங்கள் பற்றி எழுதுவதற்குத் தவறியிருந்தனர்.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள் இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் பற்றிய இவ்வினாவுக்குச் சரியாக விடை அளித்திருந்தனர்.

**(c)** பணத்திற்கான கேள்விக்கான நோக்கங்கள் பற்றி இவ்வினா பரீட்சித்திருந்தது. அவற்றில் இரண்டினை விபரிப்பதற்கு இங்கு எதிர்பார்க்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இதற்கு நன்றாக விடை அளித்திருந்தனர். ஆனால் சில பரீட்சார்த்திகளின் விடைகள் அவர்களிடம் தொடர்புடைய எண்ணக்கருக்கள் பற்றிய எவ்வித விளக்கமோ அல்லது அறிவோ இல்லை என்பதைக் காட்டுகிறது. ஒரு சில பரீட்சார்த்திகள் எவ்வித சம்பந்தமுமற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

### வினா இல. 05

**(a)** இந்த வினா கிரய எண்ணக்கரு பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது.

எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடைகளை அளித்திருக்கவில்லை. ஒரு சிலர் மாத்திரமே வரைபுகளைப் பயன்படுத்தி சரியாக விடை அளித்திருந்தனர். மேலும், அதிகமான வரைபுகள் வரைபுகளின் அச்சுகளுக்குப் பெயரிடப்படாமை, வளையிகளுக்குப் பெயரிடப்படாமை, வளையிகள் சரியாகச் சந்திக்காமை அல்லது அவை தவறாக இருந்தமை போன்ற குறைபாடுகளைக் கொண்டிருந்தன.

**(b)** இந்த வினா கோவிட் 19 பற்றிய உரிய நேர, நடைமுறை வினாவாகும். இங்கு கோவிட் 19 காரணமாக பொருளாதாரத்தில் ஏற்படும் வருமான மற்றும் இழப்புகள் பற்றிக் கூறுவது பரீட்சார்த்திகளுக்குச் சாத்தியமானதாக இருந்ததுடன் அத்தகைய ஏதாவது அம்சங்கள் பற்றி அவர்களால் விளக்கியிருக்கவும் முடியும். அதிக பரீட்சார்த்திகள் அதிகமாகப் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட ஒரு வினாவாக இது இருந்தது. இந்த வினாவுக்கு சரியான விளக்கத்துடன் கூடிய விடைகளை பரீட்சார்த்திகள் வழங்கியிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

## பகுதி C

### வினா இல. 06

20 புள்ளிகள் ஒதுக்கப்பட்ட இவ்வினாவின் மூலம் சர்வதேச வர்த்தகம் மற்றும் தேசிய வருமானக் கணக்குகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய அறிவு மற்றும் விளக்கம் பற்றிப் பரீட்சிக்கப்பட்டது.

**(A)** **(a)** அதிகளவான பரீட்சார்த்திகள் இங்கு குறிப்பிடுமாறு கேட்கப்பட்ட சர்வதேச வர்த்தகத்தின் அனுகூலங்களை எழுதியதன் மூலம் இந்த வினாவுக்குச் சரியான விடைகளை அளித்திருந்தனர். எவ்வாறாயினும், சகல 4 அனுகூலங்களும் எழுதப்பட்டிருந்த விடைகள் மிகவும் சொற்பளவானவை ஆகும்.

**(b)** இந்தப் பகுதியில் 'நிலையான பரிமாற்று வீதம்' மற்றும் நெகிழ்ச்சியான (மிதப்பு) பரிமாற்று வீதம்' ஆகிய எண்ணக்கருக்களுடன் தொடர்புடைய அறிவு பரீட்சிக்கப்பட்டது. எவ்வாறாயினும், ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே எண்ணக்கருக்களுக்கு

இடையிலான வேறுபாட்டைச் சரியாகக் குறிப்பிட்டிருந்தனர். அதிகளவான விடைகள் பூரணமற்றதாகக் காணப்பட்டமையானது சம்பந்தப்பட்ட எண்ணக்கருக்கள் பற்றிய சரியான விளக்கத்தைப் பல பரீட்சார்த்திகள் கொண்டிருக்கவில்லை என்பதையே காட்டுகிறது.

**(B)** இந்த வினா தேசிய வருமானக் கணக்குகளைத் தயாரிப்பதன் முக்கியத்துவத்திற்கான 3 காரணங்களை நிரற்படுத்தும்படி கேட்டிருந்தது. இவ்வினாவுக்கு வழங்கப்பட்ட விடைகள் திருப்தியான மட்டத்தில் இருக்கவில்லை. இது, இந்தக் கோட்பாட்டு வகை வினாக்களுக்கு பரீட்சார்த்திகளால் திருப்திகரமான விடைகளை அளிக்க முடியவில்லை என்பதையே காட்டுகிறது.

**(C)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவில் தரப்பட்ட அனுமானத் தரவுகளைப் பயன்படுத்தி தரப்பட்ட தொடர்புடைய எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்து சரியாக விடை அளித்திருக்கவில்லை. சம்பந்தப்பட்ட எண்ணக்கருக்கள் பற்றிய போதுமானளவு சரியான கோட்பாட்டு ரீதியான அறிவினை பரீட்சார்த்திகள் கொண்டிருக்கவில்லை என்பதை அதிகளவான விடைகளில் இருந்து அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

\- - -

**<u>பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** பாடத்திட்டத்தை முழுமையாகவும் பூரணமாகவும் படிப்பதுடன் புதிய பாட விடயங்கள் மீது அதிக கவனத்தையும் செலுத்தவும்.

**(2)** மிகக் கவனத்துடன் வினாவை வாசித்ததன் பின்னர் குறிப்பான மற்றும் நேரடி விடைகள் எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புக்களையோ விபரங்களையோ எழுத வேண்டாம்.

**(3)** வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் நிரல் வினாத்தாளுடன் இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் நிரலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடைளித்தல் வேண்டும்.

**(4)** சுய கற்றல் ஏடு, புத்தகங்கள், கையேடுகள், மடல்கள், சஞ்சிகைகள், மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் மற்றும் பாடத்துடன் சம்பந்தப்பட்ட ஏனையவற்றை வாசிக்கவும்.

**(5)** வரைபுகளுக்குச் சரியாகப் பெயரிட்டு விபரிப்பதில் கவனம் செலுத்தவும்.

**(6)** கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்கள் துல்லியமாக இடப்படுதல் வேண்டும்.

**(7)** வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

**(8)** கடந்தகால வினாத்தாள்களைச் செய்து பார்த்து, அவற்றை பரிந்துரைக்கப்பட்ட விடைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.

**(9)** நேரத்தைச் சரியானவாறு முகாமை செய்யவும்.

**(10)** முன்னாயத்தத்துடனும் பரீட்சையை வெற்றிகொள்ளும் எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

\- * * * -